# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1986/9 - 2016 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2016.09.27

*1986/9 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2002 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்

2015 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பெறுமதி சேர் சட்டத்தினால் (திருத்த) கடைசியாக திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் (உ) பந்தியின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் கல்யாணி தஹநாயக்க ஆகிய நான், 2016.01.01 ஆந் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு, இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரித் திட்டத்தினை தொழிற்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களைக் குறித்துரைத்து இத்தால் அறிவிக்கின்றேன்.

2015, ஏப்பிறல் 16 ஆந் திகதிய 1910/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் 2016.01.01 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

கல்யாணி தஹநாயக்க,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

கொழும்பு 02.
2016, செத்தெம்பர் 23.

**அட்டவணை**

**இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (இ.பெ.சே.வ) சட்டத்தின் தொழிற்பாடு**

1. **இ.பொ.சே. வரித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு தகைமை பெற்றவர்கள்**

(அ) பின்வரும் பெ.சே.வ. பதிவுசெய்து கொண்டஆட்கள் மற்றும் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆட்களுக்கான ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்குனர்கள் இ.பெ.சே.வ. திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கு உரித்துடையவர்களாவர்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(i) மொத்த வழங்கல்களின் 50% இனை விஞ்சுகின்ற கருத்த்திட்டத்துடன் தொடர்புடைய வழங்கல்களாக இருக்கின்ற அத்தகைய வழங்கல்களாக இதுவரையிலான கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியில் பெ. சே. வரிச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் உள்ளீட்டு வரிக் கோரிக்கைக்கு உரித்துடையவராகவிருக்கின்றவரும், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் பெ. சே.வ. எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலாம் அட்டவணையின் பகுதி II இன் பந்தி (ஊ) இன் உட்பிரிவு (ஐ) இல் குறித்துரைக்கப்பட்டவாறான, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உபாய அபிவிருத்திக் கருத்திட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (4) இன் நியதிகளின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உபாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு (இதகத்துப்பின்னர் உஅக எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொருட்கள் அல்லது சேவைகளினை வழங்குகின்ற எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள் ;

(ii) கருத்திட்டத்ததுடன் தொடர்புடைய கொள்வனவுகளாகவிருக்கின்ற அத்தகைய கொள்வனவுகளாக இதுவரையிலான கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியில் பெ.சே.வ. சட்டத்தின் கீழ் உள்ளீட்டு வரியினைக் கோருவதற்கு உரித்துடையவரும், உஅக உள்ளடங்கலான பெ.சே.வ. சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (7) உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் ;

(iii) பெ.சே.வ. சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இன் பந்தி (ஊ) இன் உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தில் ஈடுபடுகின்ற எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள் ;

(iv) அவரின்மொத்த வழங்கல்களின் ஐம்பது சதவீதத்தினை விஞ்சுகின்ற பூச்சிய வீதமளிக்கின்ற வழங்கல்களினைக் கொண்டிருக்கின்ற பெ.சே.வ. சட்டத்தின் 7 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பூச்சிய வீதமளிக்கப்பட்ட சேவைகளின் எவரேனும் ஏற்றுமதியாளர்கள் அல்லது சேவை வழங்குநர்;

(v) அத்தகைய வழங்கல்கள் மற்றும் பூச்சிய வீதமளிக்கப்பட்ட வழங்கல்களின் பெறுமதியானது ஐம்பது சதவீதத்தினை விஞ்சுமாயின், ஏற்றுமதிக்கான பொருட்களில் தயாரிப்புக்காக பயன்படுத்தப்பட வேண்டிய ஏற்றுமதியாளர்களுக்கு, இலங்கையில் அவரினால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் (பெ.சே.வ. விதிப்பனவுக்குட்படக்கூடிய) வழங்கல்களினை மேற்கொள்கின்ற எவரேனும் தயாரிப்பாளர்;

(vi) மொத்த வரி விதிக்கத்தக்க வழங்கலில் ஐம்பது சதவீதத்தினை விஞ்சும் வகையில் அத்தகைய சேவைகளை வழங்குமிடத்து, ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பொருட்களின் தரம், பண்பு அல்லது பெறுமதியினை மேம்படுத்தும் வகையில் ஏற்றுமதியாளர்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளினை வழங்கும் எவரேனும் சேவை வழங்குநர்;

(vii) அத்தகைய பொருட்களின் சேவைகளை வழங்குகின்ற அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் மொத்த வழங்கலில் ஐம்பது சதவீதத்தினை விஞ்சுகின்ற அத்தகைய வழங்கல்களின் பெறுமதியானது கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கிணங்க, ஆணையாளர் நாயகம் திருப்திப்பட்டு அளிக்கப்பெற்றதும் மேலே (i), (ii), (iii), (iv), (v) அல்லது (vi) உப பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதிவு செய்யப்பட்ட ஆட்களுக்கான பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள்.

(ஆ) பெ.சே.வ. அறவிடத்தகாத அத்தகைய உபாய அபிவிருத்திக் கருத்திட்டத்தினைக் கருத்தில் கொள்ளாது இ.பெ.சே.வ. சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்குத் தேவைப்படுகின்ற மேலே விடயம் (ii) குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உபாய அபிவிருத்திக் கருத்திட்டம்.

2. **இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வரியின் கீழான பதிவு நடைமுறை**

இ.பெ.சே.வரி பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய படிவம் மற்றும் ஆவணங்கள் பற்றிய தகவல்களை உள்நாட்டு இறைவரி திணைக்கத்தின் வரி செலுத்துநர் சேவைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை www.ird.gov.lk என்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (இதனகத்துப் பினனர் உஇதி எனக் குறிப்பிடப்படும்) இணையத்தள முகவரியிலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வரி திட்டத்தின் பதிவு செய்வதற்கு, குறித்த விண்ணப்பதாரி அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக இருத்தல் வேண்டும். கம்பனிகளைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரி பணிப்பாளர்கள் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியாக இருத்தல் வேண்டும். பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரதி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பங்குடைமை வியாபாரங்களைப் பொறுத்தவரை விண்ணப்பதாரி பங்குடைமையாளரில் ஒருவராக இருத்தல் வேண்டும். தனிலாள் உடமையினைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரி அதன் உரிமையாளராக இருத்தல் வேண்டும். மேலும் பதிவினைப்

பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரி அவராகவே சமூகமளித்தல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனிகளைப் பொறுத்தவரை கம்பனியின் அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி அல்லது விண்ணப்பதாரி இ.பெ.சே.வரி பதிவு நோக்கத்திற்காக சமூமளித்திருத்தல் வேண்டும். வெளிநாட்டு கம்பனிகளாக இருந்தால் விண்ணப்பதாரி கணக்காய்வு நிறுவனம் அல்லது சட்டவாளர் நிறுவனமொன்றாக இருக்க முடியும்.

இலத்திரனியல் பதிவு செய்தலானது, இலகுபடுத்தப்பட்ட பெ.சே. வ. திட்டத்தின் கீழ் பதிவு செய்தலுக்கு ஏற்புடையதல்ல.

**குறிப்பு**.-

(அ) மீளளிப்புக்கான தகைமையினைக் கொண்டிருக்காத ஆட்கள் இ.பெ.சே.வரித் திட்டத்தின் கீழ் பதிவு செயதிருக்காத அவர்களின் வழங்குநர்களை இ.பெ.சே.வ திட்டத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேடடுக்கொள்ளும்படி கோரப்பட்டுள்ளார்கள்.

(ஆ) பிற் திகதியிடப்பட்ட பதிவானது 14 நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியினை மாத்திரம் கொண்டிருக்கும் வழங்குனர்கள் தொடர்பில் மட்டும் கவனம் செலுத்துகின்றது.

(இ) இந்த ஒழுங்குவிதியில் பந்தி (அ) இன் (i) (இலிருந்து (vii) வரையிலான விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் எனப் பெயரிடப்படுவதுடன், (இதனகத்துப் பின்னர் "பஇகொ" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அவரின் கொள்வனவானது இடைநிறுத்தப்பட்ட கொள்வனவு எனவும் அழைக்கப்படும்.மேற்குறித்த தகைமையுடைய அனைவரும் இ.பெ.சே.வ. திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகைமையினைக் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) இந்த அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (அ) உட் பந்தியின் விடயம் (i) இல் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளுக்கான பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகுதிநிலையினை வழங்குவதில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், அவரின் வழங்கல்களில் 50% இற்கு மேற்பட்டவை உபாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளன என்பது குறித்து திருப்தியடைதல் வேண்டும். மேலும், இந்த நோக்கத்திற்காக, தேவைப்படுத்தப்பட்டவாறு, உறுதிப்படுத்தலினைப் பெற்றுக் கொள்வதற்காக வியாபாரத் தளத்திற்கு விஜயம் மேற்கொள்ளப்படுகின்றன்றது.

(உ) இந்த அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (அ) உப பந்தியின் விடயம் (iv), (v), (vi) அல்லது (vii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆளொருவருக்கான பதிவு செய்யப்பட்ட இனம் காணப்பட்ட வழங்குநர் தகைமையினை வழங்குவதில், குறித்து விடயம் (iv), (v), (vi) அல்லது (vii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆளின் மொத்த வழங்கல்களில் அவரின் மொத்த வழங்கல்கள் 50% இற்கும் அதிகமானவையா என்பது குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணனி முறைமையிலிருந்து உறுதிப்படுத்தப்படும். மேலும், இந்த நோக்கத்திற்காக, தேவைப்படுத்தப்பட்டவாறு, உறுதிப்படுத்தலினைப் பெற்றுக் கொள்வதற்காக வியாபாரத் தளத்திற்கு விஜயம் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஊ) வழங்குநரொருவராக இந்த முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் பெறுமதி சேர் வரி பதிவு செய்யப்பட்ட ஆள், பதிவு செய்யப்பட்ட இனங்காணப்பட்ட வழங்குநராக (பஇவ) குறிப்பீடு செய்யப்படுகின்றார். (இதனகத்துப்பின்னர் "பஇவ" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநருக்கு மேற்கொள்ளப்படும் வழங்கலானது இடைநிறுத்தப்பட்ட வழங்கலாக கருதப்படுவதுடன், அத்தகைய வழங்கல் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற வரி விபரப்பட்டியலானது இடை நிறுத்தப்பட்ட வரி விபரப்பட்டியல் என அழைக்கப்படும்.

(எ) பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் கீழ் விலக்களிப்புப் பெறுகின்ற வழங்கல் ஆனால் பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு 22(10) இன் கீழான நியதிகளின்படி, வரி விதிக்கத்தக்க வழங்கலாக கருதப்படுகின்றதும் இயைபான அரசாங்க அதிகார சபைக்கு மேற்கொள்ளப்படும் அத்தகைய வழங்கலினை விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களில் ஈடுபடுத்துகின்ற ஆளொவருவரின் ஏதேனும் வழங்கல்.

(ஏ) ஏதேனும் உபாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்படும் ஏதேனும் பொருட்கள் அல்லது சேவையானது, பெ.சே.வ. சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இன் கீழ் விலக்களிப்புப் பெற்ற ஓர் வழங்கலாகும். இருந்தபோதிலும், பெசேவ சட்டத்தின் பிரிவு 22(10) இன் கீழான நியதிகளின் அடிப்படையில் வரி விதிக்கத்தக்க வழங்கலாக கருதப்படும். எவ்வாறாயினும், இ.பெ.சே.வ. திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளொருவரினால் மேற்கொள்ளப்படுகின்ற அத்தகைய வழங்கலாயின், அத்தகைய வழங்கலானது இடைநிறுத்தப்பட்ட வழங்கலாக கருதப்படும்.

(ஐ) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளராக இருப்பதற்குரிய தகைமையினைக் கொண்டுள்ள ஆளொருவரினால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுவகையில், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து இ.பெ.சே.வ. வரவு வவுச்சர்களினைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள இரண்டு ஆட்களின் பெயர்கள் மற்றும் தே.அ.அ. இலக்கஙற்கள் (இலங்கைப் பிரஜையாக இல்லாதவிடத்து வாலிதான கடவுச்சீட்டு இல.) என்பன விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். இந்த அதிகாரமளித்தலானது, விண்ணப்பத்தில் கையெழுத்திட்டுள்ள ஆளினால் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட்டலன்றி, மாற்றம் செய்யப்பட முடியாது. அத்தகைய ஆள் பதிவு செய்யப்பட்ட ஆளுடன் பணியாற்றாவிடின், இன்னொரு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் கோரிக்கையில் கையெழுத்திட முடியும். ஆனால் அத்தகையள ஆளின் தகைமையானது ஆவண ரீதியான சான்றின் மூலமாக நிரூபிக்கப்படுதல் வேண்டும்.

(ஒ) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்படட்ட் கொள்வனவாளர்கள் பெ. சே. வ. மூலக்கூறினை இடைநிறுத்தும் இந்த ஒழுங்குவிதியின் 1 ஆம் பந்தியின் (i), (ii), (iii), (iv), (v), (vi) அல்லது (vii) ஆம் விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் உரிய செயற்பாடு முன்னெடுப்பதற்காக பொருட்களைக் கொள்வனவு செய்யவோ அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையினைக் கொண்டுள்ளார்கள். அத்தகைய கொள்வனவானது குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட கொள்வனவாக கருதப்படும். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரக்ள் நியம விகித வழங்கல்களை மேற்கொள்வதற்கான தகைமையினையும் கொண்டுள்ளதுடன், ஆனால் குறித்த கலண்டர் மாதத்திற்கான அத்தகைய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட எவரேனும் ஆளின் மொத்த பூச்சிய விகிதமிடப்பட்ட வழங்கல்கள் மற்றும் இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் அவரின் மொத்த வழங்கல்களின் 50% இற்கும் குறைவானதாக இருத்தலாகாது. அத்தகைய சூழ்நிலையில் அவர் அதன் வரி விதிக்கத்தக்க வழங்கல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற இடைநிறுத்தப்பட்ட நியதிகளின் கீழ் பொருட்களை கொள்வனவு செய்வதற்குரிய அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய தகைமையினைக் கொண்டிருப்பதுடன், அத்தகைய கொள்வனவாது குறித்துரைக்கப்பட்ட நோக்கமொன்றிற்காக பயன்படுத்தப்பட்ட கொள்வனவொன்றாக கருதப்படும். பூச்சிய வீதமளிக்கப்பட்ட வழங்கல்கள், இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மற்றும் உபாய அபிவிருத்திக் கருத்திட்டத்துடன் தொடர்புடைய வரி விதிக்கத்தக்க வழங்கல்களாக கருதப்படும் வழங்கல்களினைப் பொறுத்த வரையில், அவர் ப.இ.கொ தகுதி நிலையிலிருந்து பஇவ தகுதி நிலைக்கு மாறிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.:

(ஓ) இடை நிறுத்தப்பட்ட நியதிகளின் கீழ் கொள்வனவு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களின் பட்டியலானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர் எவரேனும்,கொள்வனவாளரானவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரா என்பதனை இத்தகவலைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம். புதிய பதிவு செய்தல்கள், இரத்துச் செய்தல்கள், தகைமையில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் இ.பெ.சே.வ. இன் கீழ் தடை செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆட்களின் விபரங்கள் தொடர்பான தகவல்களைக் கொண்ட பட்டியலானது ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் புதுப்பிக்கப்பட்டு வெளியீடு செய்யப்படும். எனவே, அனைத்து பதிவுசெய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களும் மேற்படி தகவல்களை இணையத்தளத்தில் பார்த்துக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(ஔ) வெளிநாட்டுக் கம்பனிகளைப் பொறுத்தவரையில், விண்ணப்பதாரி அல்லது கையொப்பமிடுபவர் அல்லது வரவு வவுச்சர் சேகரிப்பாளரானவர் கணக்காய்வு நிறுவுனம் அல்லது சட்டவாளர் நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது அத்தகைய நிறுவனத்தின் பங்காளர்களாயின், இந்த ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்ட வரி விடயங்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகவும் சட்ட ரீதியாக கட்டுப்படுபவனாகவும் இருக்கும்.

### 3. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கான விசேட ஒழுங்கு விதிகள்

#### 3.1 இடைநிறுத்தப்பட்ட வரி விபரப்படியல்களும் படிவம் இ.பெ.சே.வ. 04 இனைச் சமர்ப்பிக்கப்படுதலும்

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கான வழங்கல்கள் மீதான இடைநிறுத்தப்பட்ட வரி விபரப்பட்டியல் (இ.பெ.சே.வ 02) ஒன்றின் மீது, பெறுமதி சேர் வரி மூலக்கூற்றை "இடைநிறுத்தப்பட்ட பெறுமதி சேர்" ஆக காண்பிக்க முடியும். அத்தகைய இடைநிறுத்தப்பட்டவிபரப்பட்டியலானது எவ்வித தாமதமின்றி வழங்கப்படுதல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஆளொருவருக்கு இடைநிறுத்தப்பட்ட நியதிகளின் கீழ் வழங்கல்களினை மேற்கொள்வதற்கு முன்னதாக, பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர் அத்தகைய ஆள் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர் மற்றும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் ஆகியோரின் பெயர்ப் பட்டியல்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ii) வரி விபரப்பட்டியலானது, பெ.சே.வ. சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கத்தகாத உள்ளீடு அல்லாத எத்தகைய சந்தாப்பத்திலும் எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருக்கு வழங்கப்படுதலாகாது.

(iii) கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியில் உபாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட வரி விதிக்கத்தக்க வழங்கல்களாக கருதப்படக்கூடியவாறான பெ.சே.வ. விலக்களிப்புப் பெற்ற ஏதேனும் வழங்கலிலிருந்து விலக்களிப்புப் பெற்ற பொருடகள் அல்லது ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கு இ.பெ.சே. வ. செயல்திட்டத்தின் கீழ் வழங்கப்பட முடியாது. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவராக இருக்கின்ற ஏதேனும் உபாய அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு இ.பெ.சே.வ. திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் அத்தகைய வரி விதிக்கத்தக்க வழங்கலானது, இந்த அட்டவணையின் 2 ஆம் பந்தியின் குறிப்பு(எ) இன்படி, இடைநிறுத்தப்பட்ட வழங்கலாக கருதப்படுகின்றதுடன், இதனால் அத்தகைய ஆள் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநருக்கு ஏற்புடையதான ஒழுங்குவிதிகளினைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(iv) வழங்கல்கள் காசு அடிப்படையிலான கணக்கீட்டுக்காக பெ. சே. வ. சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காவிடின், சேர்ந்த அடிப்படையில் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். அது காசு அடிப்படையிலானதெனில், வழங்கல் காலப்பகுதியானது வழங்குனரினால் பெறப்படுகின்ற கொடுப்பனவு காலப்பகுதியாகும். எவ்வாறாயினும், காசு அடிப்படையில் அல்லது சேர்ந்த அடிப்படையில் பெறப்பட்ட ஏதேனும் முற்பணக் கொடுப்பனவானது அத்தகைய கொடுப்பனவு பெறப்படுகின்ற வரி விதியாகும் காலப்பகுதி யில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர் பெறுமதி சேர் வரிச்சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டவாறான வழங்கல் நேரத்துடன் தொடர்புடைய ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும். ஆகையால், இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களும் அந்த அடிப்படையிலேயே வெளிப்படுத்தப்படுத்தப்படுதல் வேண்டும்.

(vi) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரானவர்இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மற்றும் வரவு வவுச்சர் இலக்கங்கள் தொடர்பான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக் கொள்வதற்கு இயைபான பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரின் அங்கீகாரத்தினைப் பெறும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற வழங்கல்களில் இயைபான மாதத்தின் இறுதியிலிருநததான 15 நாட்களினுள்இலத்திரனியல் வேவையினைப் பயன்படுத்துவதன் மூலம், பொருட்கள் /சேவைகளின் வெளிப்படுத்துகைப் படிவம் இ. பெ. சே. வ. 04 இற்கான பிரதான தரவுகளினை வழங்கியுதவுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர். இது தொடர்பில் பதிவு செய்யப்பட்ட இனங்காணப்பட்ட வழங்குனரானவர் ஆணையாளர் நாயகத்தின் இணையத்தள நுழைவாயிலிலிருந்து பெறக் கூடியதான இபெசேவ தொடர்பான துரித வழிகாட்டியினை பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(vii) ஏதேனும் மாத காலப்பகுதியினுள் இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையெனில், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரானவர், செலவுத் தாள்கள் அல்லது வரவுத் தாள்களின் பெறுமதியாக குறிப்பிடப்பட வேண்டிய பெறுமதி இல்லாவிடின், படிவம் இ.பெ.சே.வ 04 இனைப் புதுப்பிக்குமாறும் இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களின் செவ்வைப் பெட்டியில் இல்லை எனக் குறிப்பிடுமாறும் தேவைப்படுத்தப்படுகின்றார்.

(viii) உரிய காரணங்களுடன் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் நராகரிக்கப்ப்டுகின்ற படிவம் இ.பெ.சே.வ 04 இல் தரப்பட்டுள்ள தகவல்களாயின், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரானவர் மின் கோவையிடல் வசதியினைப் பயன்படுத்துவதன் மூலம் பதிவு செய்யப்பட்டு இன்ங்காண்ப்பட்ட கொள்வனவாளரின் அங்கீகாரத்திற்காக இ.பெ.சே.வ 04 படிவத்தினை மீளவும் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

(ix) தரப்பட்டுள்ள கால எல்லையினுள் இ.பெ.சே.வ 04 படிவத்தினை புதுப்பித்திருக்காத பதிவு செய்யப்பட்டு இனங்காண்ப்படட வழங்குனரைப் பொறுத்தவரையில், அதிகாரமளிக்கப்பட்ட பதிவு செய்யப்பபட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால்கையொப்பமிடப்பட்டுள்ள இ.பெ.சே.வ 04 படிவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய வரவு வவுச்சாகளுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கோள்ளப்படுகின்றார்.

(x) பதிவு செய்யப்பட்டு இனங்காண்ப்பட்ட கொள்வனவாளரினால்அங்கீகரிக்கப்பட்டதும், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் ஏற்கனவே இற்றைப்படுத்தப்பட்டுள்ள பதிவேட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏதேனும் திருத்தம் அல்லது நீக்ககையின் போது மின் கோவையிடல் வசதியானது கிடைக்கப்பெறாதவிடத்த, பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரானவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருகை தந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலர் ஒருவரிடமிருந்து அத்தகைய வசதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

(xi) இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. தொடர்பான வழங்கல்களினை கணப்பீடு செய்வதற்கு தனியான பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும்.

(xii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் அவ்வாறு கோரிக்கை விடுக்கப்படின், பதிவு செய்யப்படடு இனங் காணப்பட்ட வழங்குனர் இ.பெ.சே.வ படிவம் 04 இனைப் புதுப்பிப்பதற்கு முன்பாக பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருக்கு இ.பெ.சே.வ படிவம் 05 (விரிவான விலை விபரப்பட்டியல்) இனை மின்னஞ்சல் செய்தல் வேண்டும்.

*3.2* **வரவு வவுச்சர்கள் மற்றும் இ.பெ.சே.வ. அட்டவணை 05 (இபெசேவ 05அ, இபெசேவ 05 ஆ ஏதேனுமிருப்பின்) மற்றும் இ.பெ.சே.வ 07 இனைச் சமர்ப்பித்தல்**

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனருக்கு, இலத்திரனியல் சேவைகளினூடாக பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்ட இ.பெ.செ.வ. படிவம் 04 இன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வ. வரவு வவுச்சரொன்று அளிக்கப்படுகின்றது. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரானவர் இலத்திரனியல் வடிவில் அளிக்கப்படுகின்ற அங்கீகாரத்தினைக் கவனத்தில் கொள்ளாது அத்தைய வரவு வவுச்சரினைப் பெற்றுக் கொள்ளுமாறும் அத்தகைய வவுச்சரினை ஐந்து வருடங்களுக்கு வைத்திருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ii) ஏதேனும் வரி விதிக்கத்தக்க காலப்பகுதி தொடர்பில் எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் பெறப்பட்ட அனைத்து வரவு வவுச்சர்களும், அவரினால் அவ்வாறு கோரப்படாதவிடத்து, இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களினை நிரூபிப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுதினறனர்.

(iii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரானவர், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து இபெசேவ 05, இ.பெ.சே.வ 05அ, இ.பெ.சே.வ 05 ஆ மற்றும் இ.பெ.சே.வ 07 அட்டவணை முன்வடிவங்கள் மற்றும் சான்றுப்படுத்தும் கருவி அட்டவணைகளினை பதிவிறக்கம் செய்கு கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரானவர் அட்டவணைகளின் தயாரிப்புக்குப் பிந்திய அட்டவணை உருமாதிரிகள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்ய வேண்டும்.

(iv) இலத்திரனியல் சேவை நடைமுறையுடன் ஒழுங்கான முறையில் புதுப்பிக்கப்படுகின்ற உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கிடைக்கக் கூடியதான இ.பெ.சே.வ துரித வழிகாட்டிகள் இணங்கி செயற்படுதல் வேண்டும்.

(v) அடுத்த வரும் மாதத்தின் இறுதியன்று அல்லது அதற்கு முன்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலரின் உதவுகையுடன் இன்றநெற் இனைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் இலத்திரனியல் சேவைகளினைப் பயன்படுத்துவதன் மூலம் மாத்திரம் பதிவேற்றப்படுவதற்கு தேவைப்படுகின்ற் அனைத்து இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் தொடர்பில் தரப்பட்ட உருமாதிரிகள் மீது தயாரிக்கப்பட்டுள்ள இ.பெ.சே.வ. அட்டவணை 05 (இபெசேவ 05 மற்றும் இபெசேவ 05ஆ என்பன ஏற்புடையதாயின்)

(vi) 20 இற்கும் மேற்பட்ட பதிவுகள் பதிவு செய்யப்பட வேண்டியிருக்கும் போது அட்டவணை இ.பெ.சே.வ. 07 ஆனது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் இலத்திரனியல் சேவைகளினைப் பயன்படுத்துவதன் மூலம் பதிவேற்றப்படுதல் வேண்டும். 20 இற்கும் குறைவான பதிவுகள் பதிவு செய்யப்பட் வேண்டியிருக்கும் போது, அட்டவணையானது அடுத்தவரும் மாதத்தின் இறுதியன்று அல்லது அதற்கு முன்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலரின் உதவுகையுடன் இன்றநெற் இனைப் பயன்படுத்துவதன் மூலம் பதிவேற்றப்படலாம் அல்லது புதுப்பிக்கப்படலாம்.

(vii) வரவுத்தாள் பெறப்படுகின்ற / வழங்கப்படுகின்ற ஏதேனும் மாதத்துடன் தொடர்புடைய ஏதேனும் வழங்கலின் திரும்பல் வேறு ஏதேனும் காரணத்தினால் குறைக்கப்பட வேண்டிய வழங்கல்களின் பெறுமதியாயின், தகவலானது குறித்த மாதத்திற்காக பெறப்பட்ட வாவு வவுச்சரின் இலக்கத்துடன் மேலே இ.பெ.சே.வ அட்டவணை 05ஆ இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். வரி விபரப்பட்டியல்களின் மூலப் பெறுமதி மற்றும் வரவுத்தாள்களின் பெறுமதி என்பன இ.பெ.சே.வ. அட்டவணை 07 இல் குறிப்பிடப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், வரவு வவுச்சரானது தேறிய பெறுமதியிலேயே பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் வழங்கப்படுகின்றது.

(viii) முன்னதாக வெளிப்படுத்தப்பட்ட வழங்கல்கள் தொடர்பில் குறித்த மாத காலப்பகுதியில் குறைக்கப்பட வேண்டிய வழங்கல்களின் பெறுமதியாயின், தகவலானது முன்னதாக பெற்றுக் கொள்ளப்பட்ட வரவு வவுச்சர்களுடன் நடைமுறை

மாத இ.பெ.சே.வ. அட்டவணை 05ஆ இலும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். தேறிய வழங்கல்கள் தொடர்பான வரவு வவுச்சரின் நடைமுறை மாத காலப்பகுதியுடனும் வரவுத்தாள்களின் பெறுமதியுடனும் வெளிப்படுத்தப்பட்ல் வேண்டும். எவ்வாறாயினும், வாவு வவுச்சரானது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் தேறிய பெறுமதி மீது வழங்கப்படுகின்றது. வழங்கல்களின் மூலப் பெறுமதி மற்றும் வரவுத்தாள்களின் பெறுமதி என்பன இ.பெ.சே.வ. அட்டவணை 07 இல் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(ix) குறித்த மாத காலப்பகுதியில் இடைநிறுத்தப்பட்ட கொளவனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படாது, ஆனால் முன்னதாக வெளிப்படுத்தப்பட்ட வழங்கல்களுடன் தொடர்புடைய வழங்கல்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுமாயின், எதிர்மறைப் பெறுமதியில் பெறப்பட்ட நடப்பு வரவு வவுச்சர் இலக்கத்துடன் இணைந்து அத்தகைய வழங்கல்களுக்கு முன்னதாக பெறப்பட்ட வரவு வவுச்சருடன் இ.பெ.சே.வ. அட்டவணை 05ஆ இலும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். செலவுத்தாள்களின் பெறுமதியானது இ.பெ.சே.வ. அட்டவணை 07 இல் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(x) வரவுத்தாள் வழங்கப்படுகின்ற /பெறப்படுகின்ற ஏதேனும் மாதத்துடன் தொடர்புடைய ஏதேனும் காரணத்தினால் அதிகரிக்கப்பட வேண்டிய வழங்கல்களின் பெறுமதியாயின், தகவலானது குறித்த மாதத்திற்காக பெறப்படட வரவு வவுச்சரின் இலக்கத்துடன் மேலே இ.பெ.சே.வ. அட்டவணை 05 இல் வெளிப்படுத்தப்படுகின்ற வழங்கல்களின் பெறுமதி வழங்குகின்ற இ.பெ.சே.வ. அட்டவணை 05அ மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள வழங்கல்களின் பெறுமதி அதிகரிப்புக்கான வழங்கல்களுடன் தொடர்புடைய இயைபான வரவு வவுச்சர் என்பவற்றிலும் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(xi) இ.பெ.சே.வ. 05, 05அ, 05ஆ, அல்லது 07 அட்டவணைகள் அல்லது உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டிராத அல்லது ஏற்கனவே பதிவேற்றப்பட்ட பதிவுக்கு மேற்கொள்ளப்பட வுள்ள ஏதேனும் திருத்தம் அல்லது நீக்குதல் இருப்பின், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரானவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருகை தந்து அதனை உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலருடன் இணைந்து மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

*3.3* **பெ.சே.வ விபரத்திரட்டு**

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர், அத்தகைய இடைநிறுத்தப்பட்ட வழங்கல் தொடர்பில், பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்படாத வரவு வவுச்சரொன்றினைக் கருத்தில் கொள்ளாது வழங்கல் நேரத்தினைக் கருத்தில் கொண்டு பெ.சே.வ. விபரத்திரட்டின் கூடு C இலுள்ள பெ.சே.வ. இடைநிறுத்தப்பட்ட வரி விதிக்கத்தக்க வழங்கல்களினை வெளிப்படுத்துதல் வேண்டும். இடைநிறுத்தப்பட்ட வழங்கல் மீதான உரிய இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. தொகையானது கூடு 2A இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். ஏதேனும் கலண்டர் மாதத்திற்கான வரவு வவுச்சரொன்றினூடாக இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மீதான அவரின் பெ.சே.வ. கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுக்காக கோரிக்கை விடுக்கின்ற எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர், அத்தகைய கோரிக்கையினை வழங்கல் மற்றும் இயைபான வெளியீட்டு வரி என்பன வெளிப்படுத்தப்படுகின்ற பெ.சே.வ. விபரத்திரட்டிலுள்ள கூடு R2 இல் மேற்கொள்ளுதல் வேண்டும். R2 இலுள்ள பெறுமதியானது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதிகளுக்குச் சமமாக இருத்தல் வேண்டும். தற்போதைய பெ.சே.வ. விபரத்திரட்டின் கூடு 2A இலும் மற்றும் கூடு R2 இலும் பதிவு செய்யப்பட்ட தொகைகளுக்கிடையில் வேறுபாடு காணப்படுமிடத்து, அத்தகைய வேறுபாடானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் திருப்திக்காக இ.பெ.சே.வ. படிவம் 04 இனைச் சமர்ப்பித்த பின்னர் ஏதேனும் உடனடுத்துவரும் மாதத்தில் பதிவு பெறப்படாவிடின், பெ.சே.வ. அறவிடத்தக்கதான நியம வீதமளிக்கப்பட்டவழங்கலாக கருதப்படுதல் வேண்டும்.

(ii) பெ.சே.வ. விபரத்திட்டிலுள்ள இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களின் பெறுமதி இபெசேவ 05 அ மற்றும் 05 ஆ இன் அடிப்படையிலான அட்டவணை இபெசேவ 07 இல் பெறுமதிகளுக்கிடையிலான வேறுபாட்டிற்கெதிரான வழங்கல் பெறுமதியின் மிகையாக இருத்தல் வேண்டும்.

(iii) ஏதேனும் உபாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட விலக்களிப்புப் பெற்ற ஏதேனும் பொருட்கள் / சேவைகளினைக் கொண்டுள்ள பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர் கூடு A1 இலுள்ள வரியாக கருதப்பட்ட மற்றும் வரியாக கருதப்பட்ட வரவு என்பவற்றுடன் கூடு A2 இலுள்ள அத்தகைய வழங்கலின் பந்தி 2 இன் குறிப்பு (ஏ) இன்படி இடைநிறுத்தப்பட்ட வழங்கல் எனக் கருதப்படுவதால், கூடு ‘C’ மற்றும் கூடு 2 ‘A’ இலுள்ள உரிய வரி மற்றும் கூடு R2 இலுள்ள வரவு என்பன கூடு C இல இடைநிறுத்தப்பட்ட வழங்கலாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

*3.4* **மீளளிப்புக்கள்**

பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்கனர்கள் செலுத்தப்பட்ட ஏதேனும் பெறுமதி சேர் வரி தொடர்பில் ஏதேனும் தொகையினை மீளளிப்புச் செய்வதற்கு உரித்துடையவர்களல்லர். எல்லாறாயினும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட

வழங்குனரானவா, அத்தகைய வழங்கல் மீது இடைநிறுத்தப்பட்ட வரவு வவுச்சர் வழங்கியுள்ளவரினால் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மீது அல்லது பூச்சிய வரி வீதமளிக்கப்பட்ட வழங்கல்களுடன் தொடர்புடைய அத்தகைய கொள்வனவுகள் தொடர்பில் ஏதேனும் பெறுமதி சேர் வரி பதிவு செய்யப்பட்ட ஆளிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் உள்ளூர் கொள்வனவு அல்லது பணிப்பாளர் நாயகத்திற்க மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி மீதான ஏதேனும் முற்பணக் கொடுப்பனவு மீது அவரினால் செலுத்தப்பட்ட இறக்குமதி மீதான ஏதேனும் முற்பணக் கொடுப்பனவு மீது அவரினால் செலுத்தப்பட்ட ஏதேனும் உள்ளீட்டுவரி மீளளிப்பினைக் கோருமிடத்து, 2016 ஜனவரி 01 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆரம்பமாகும் காலப்பகுதியுடன் தொடர்புடைய அத்தகைய தொகையாக இருப்பின், அத்தகைய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரின் வியாபாரத்தின் பெறுமதி சேர் வரி தொடர்பான விசேட கணக்காய்வினை மேற்கொண்டதன் பின்னர் கணக்காய்வாளர் நாயகம் திருப்தியடைவாரயின், அத்தகைய மீளளிப்பானது வரி விதிக்கத்தக்க காலப்பகுதியின் இறுதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியின் பின்னர் விடுவிக்கப்படும்.

**4. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்களுக்கான விசேட அறிவுறுத்தல்கள் - அந்நியச் செலாவணியல்லா வழங்குநர்கள்**

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்கள் வெளிநாட்டு கொள்வனவாளரின் சார்பில் வெளிநாட்டு நாணயமல்லா அடிப்படையில் அல்லது காசு அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கவாராயின், அத்தகைய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனகள் அந்நியச் செலாவணியல்லா வழங்குனரென அழைக்கப்படுகின்றனர். அத்தகைய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்கள் வழங்கப்பட்ட அத்தகைய பொருட்கள் அல்லது சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்களுக்கு தாமதிக்காமல் பொருட்கள் அல்லது சேவைகளின் (இ.பெ.சே.வ 02 (அ) படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட வாறு) காசல்லா வழங்கலின் மீது அந்நியச் செலாவணியல்லா இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. விலை விபரப்பட்டியலொன்றினை வழங்குதல் வேண்டும்.

(அ) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்கள் அத்தகைய பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கலினை வழங்குவதற்கு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரிடமிருந்து வழங்கல் கோரிக்கையொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய வழங்கல் வேண்டுகோளானது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் விபரணம், அளவு மற்றும் இறுதிப் பொருளானது ஏற்றுமதி செய்யப்படவுள்ள வெளிநாட்டு கொள்வனவாளரின் பெயர்கள் மற்றும முகவரிகளை அத்தியாவசியமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருக்கு பொருட்கள் / சேவைகளை வழங்குவதற்கான அறிவுறுத்தலுடன் கூடிய கொள்வனவு கட்டளையொன்றினை வெளிநாட்டு கொள்வனவாளரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய கொள்வனவு கட்டளை வழங்குனர்களின் பெயர், முகவரி, விபாரணம் மற்றும் தொகை என்பன மேலே (அ) இலுள்ள வழங்கல் வேண்டுகோளில் குறிப்பிடப்படடுள்ள விபரங்களுடன் ஒத்திருப்பது அவசியமானதாகும். அத்துடன்

(இ) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்கள் வேறு ஏதேனும் மூலத்திலிருந்தல்லாமல் வெளிநாட்டு கொள்வனவாளரிடமிருந்து நேரடியாக அத்தகைய வழங்கல்களின் தீர்ப்பனவாக வெளிநாட்டு மாற்றுதல்களைப் பெறுதல் வேண்டும். (உதாரணமாக வெளிநாட்டு கொள்வனவாளரின் சம்மதத்துடன் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரின் ஏதேனும் மூன்றாம் தரப்பு பொறுப்பினை கொடுத்து தீர்ப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது)

(ii) அந்நியச் செலாவணியல்லா வழங்குனரொருவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனராயின், அவர் அத்தகைய அந்நியச் செலாவணியல்லா வழங்கல் தொடர்பில் அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளராக இருக்கின்ற பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரில் வழங்கப்பட்டதும் ஆணையாளர் நாயகத்தினால் அளிக்கப்பட்டதுமான "அந்நியச் செலாணவணியல்லா கடன் வவுச்சர்" ஒன்றினைப் பெறுவார். பதிவு செய்யப்பட்டு இனங்கணப்பட்ட வழங்குனர் ஒருவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட மழங்குனரினால் வழங்கப்பட்ட வழங்கல்கள் தொடர்பில் தொடர்புடைய மாதத்தின் இறுதியிலிருந்து 15 நாட்களினுள் இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மற்றும் வரவு வவுச்சர் இலக்கங்களின் உறுதிப்படுத்தலினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரின் 15 நாட்களினுள் இலத்திரனியல் சேவைகளினைப் பயன்படுத்துவதன் மூலம் இ.பெ.சே.வ 04 இற்கு பிரதான தரவினை வழங்குமாறு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர் தேவைப்படுத்தப்படுகின்றார்.

(iii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரொருவர் (அந்நியச் செலாவணியல்லா வழங்குனர்) மேற்குறித்த படிவங்கள் கொண்டிருக்கின்ற அனைத்து ஆதரவு ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களும் மற்றும் நடைமுறைகளும் சாதாரண இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. விலை விபரப்பட்டியல், இடைநிறுத்தப்பட்ட வழங்கல் மற்றும் கடன் வவுச்சருடன் பொருத்தக் கூடிய வகையில் அவ்வாறே பிரயோகிக்கப்படும்.

**5. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கான விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் -**

**5.1 இடைநிறுத்தப்பட்டகொள்வனவுகள்**

(i) *விதித்துரைக்கப்பட்ட நோக்கம் அல்லது விதித்துரைக்கப்ப்ட்ட நோக்கமெனக் கருதப்படுகின்றவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்டு இன்காணப்பட்ட வழங்குனரிடமிருந்தான மூலப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகளினதும் அனைத்துக் கொள்வனவுகள் இடைநிறுத்தப்பட்ட கொள்வவைகளாக குறிப்பீடு செய்யப்படும். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வவைாளர்கள், பெ.சே.வ. சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் அனுமதிக்கப்படுகின்ற உள்ளீட்டு வரியல்லா கொள்வனவுகளாக இனங்காணப்படத்தக்கதான அத்தகைய கொள்வனவுகளாக இல்லாவிடின், இன்னொரு இ.பெ.சே.வ. பதிவு செய்து கொண்டுள்ள ஆளிடமிருந்து சாதாரண வரி விபரப்பட்டியலின் கீழ் கொள்வனவு செய்வகற்கு அனுமதிக்கப்படுவதில்லை.*

(ii) *இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள் விதித்துரைக்கப்பட்ட நோக்கங்ஞக்கு அல்லது விதித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் எனக் கருதப்படுபவைக்கு அவசியமானவையாக இருக்கும் அத்தகைய இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள் ஏதேனும் விலக்களிப்புப் பெற்ற வழங்கலுக்கு (இந்த அட்டவணையின் பந்தி 2 இன் குறிப்பு (ஏ) இன்படி, இடைநிறுத்தப்பட்ட வழங்கலாக கருதப்பட்டவாறு கவனத்தில் கொள்ளப்படுகின்ற விலக்களிப்புப் பெற்ற வழங்கல் தவிர்ந்தவை) அல்லது பெ.சே.வ. சட்டத்தின் கீழ் வழங்கலுக்கு (கொள்வனவு செய்யப்படும் நேரத்தில் இனங்காணப்பட்டிராத அனுமதிக்கத்தகாத பாகமொன்றாக கருதப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இடைநிறுத்தப்பட்ட கொள்வவைனவாயின்) அனுமதிக்கப்படாத ஏதேனும் பெ.சே.வ. உள்ளீட்டு வரவுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பின், இடைநிறுத்தலினூடாக பெறப்பட்ட பயன்களுக்கு அனுமதி மறுப்பதன் மூலம் பெ.சே.வ. சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் விதித்துரைக்கப்பட்டவாறு சீராக்கலொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஆளினால் எவ்வத சீராக்கலும் மேற்கொள்ளப்பட்டிருக்காவிடின், பெ.சே.வ. சட்டததின் 31 ஆம் பிரிவின் கீழ் வரி மதிப்பீடொன்று, அனுமதிக்கத்தகார உள்ளீட்டு வரவாக அத்தகைய இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. இனைக் கருத்தில் கொண்டு உதவி ஆணையாளரினால் வழங்கப்பட முடியும். (அத்தகைய மதிப்பீடு மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டப் பணத்தினை கைவிடுதல் கூடாது என தீர்மானிக்கப்பட்டுள்ளது) இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளானவை வரி விதிக்கத்தக்க வழங்கல்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பின், ஏதேனும் உள்ளீட்டு வரி கழிப்பனவு செய்யப்படாமல் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு முழுமையாக செலுத்தத்தக்க இயைபான வெளியீட்டு வரியாக இருப்பதால் (மேலேயுள்ளவாறு) சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியதில்லை. எவ்வாறாயினும், ஏதேனும் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவானது விதித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட நோக்கம் எனக் கருதப்படுபவைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது நிரூபிக்கப்படுமிடத்து, அத்தகைய இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளின் பெறுமதி மற்றும் அவற்றின் மொத்த இலாப எல்லையானது வரி விதிக்கத்தக்க வழ்ங்லாக கருதப்படுவதுடன், வரி மதிப்பீடானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பெ.சே.வ. சட்டததின் 31 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்றது.*

(iii) *வழங்குனர்களினால் வழங்கப்பட்ட பெ.சே.வ. இடைநிறுத்தப்பட்ட விலைப்பட்டியல்களின் பிரதிகள், அத்தகைய விபரங்கள் தேவைப்படும் போது, கொள்வனவுகள் மற்றும் இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. மூலக்கூறினை நிரூபிப்பதற்கான மூல ஆவணமாக ஆகக் குறைந்தது ஐந்து வருட காலப்பகுதிக்கேனும் பேணிப் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.*

**5.2 பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரின் இபெசேவ படிவம் 04 இற்கான அங்கீகாரம்**

(i) *பதிவு செய்யப்பட்டு இனங் காணப்பட்ட கொள்வனவாளர், இலத்திரனியல் சேவைகளின் கீழ் பெயர் விபரப்பக்கத்ததில் பதிவுகளினைப் பேணுகின்ற போது, பதிவு செய்யப்பட்டு இனங் காணப்பட்ட வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்ட இ.பெ.சே.வ. 04 படிவத்தினைக் காண்பிக்கின்றார். இதன்மூலம், அவர் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுக்கான இயைபான மாதத்தின் முடிவிலிருந்து 20 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாக உரிய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனருக்கு ஒதுக்கீடு செய்த வரவு வவுச்சர் இலக்கத்தினை வழங்குவது தொடர்பான அங்கீகாரத்திற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.*

*பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொளவனவாளரினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட பதிவில் மேற்கொள்ளப்படலுள்ள ஏதேனும் திருத்தம் அல்லது நீக்குதலாயின், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரானவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருகை தந்து அதனை உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலருடன் இணைந்து மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றர்.*

(ii) *குறித்த மாத காலப்பகுதியில் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவு எதுவும் இடம் பெற்றிருக்கவில்லையாயின், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரனவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரின்*

இணைய உருவகப் பெட்டியிலுள்ள செவ்வைப் பெட்டியில் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள் இல்லை என்பதனைக் குறிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**5.3 வரவு வவுச்சர்களும் இ.பெ.சே.வ அட்டவணை 06 இனைச் சமர்ப்பித்தலும்**

(i) பதிவு செய்யப்பட்ட இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கு திணைக்களத்தினால் தொடர் கட்டளையுடன் கூடிய இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வ. வரவு வவுச்சர்கள் வழங்கப்படும். இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வ. கடன் வவுச்சர்கள் புத்தகமானது 50 வரவு வவுச்சர்களைக் கொண்டிருக்கும். உரிய வழங்குனர்களுக்கு வரவு வவுச்சர்களை வழங்குகையில் அத்தகைய வரவு வவுச்சர்களை இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினால் (கையெழுத்தாளர்கள்) கையெழுத்திடுதல் வேண்டும். எனவே, அத்தகைய இ.பெ.சே.வ. கடன் வவுச்சர்கள் பெறப்படும் போது ஐந்து கையெழுத்தாளர்களின் பெயர்கள், அவர்களின் பதவிகள், மாதிரி கையொப்பங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகளின் பிரதிகள் (இலங்கைப் பிரஜைகளாக இல்லாதவிடத்து கடவுச்சீட்டின் பிரதிகள்) என்பன திணைக்களத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். அதனைத் தொடர்ந்து அத்தகைய கையெழுத்துக்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின் முன்கூட்டியே அறிவிக்கப்படுதல் வேண்டும். இத்தகவலானது விண்ணப்பத்தில் கையெழுத்திட்டுள்ள ஆளினால் ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஆளானவர் பதிவு செய்யப்பட்ட ஆளுடன் தொடர்ந்தும் பணியாற்றவில்லையெனில், அவ்வறிவித்தலில் இன்னொரு ஆள் கையெழுத்திட முடியும். ஆனால், அதிகாரமளிக்கப்பட்டவராக கையெழுத்திடுவதற்கு அத்தகைய ஆளின் தகைமையானது ஆவண மூலமான சான்றின் மூலமாக நிரூபிக்கப்படுதல் வேண்டும்.

(ii) அதனைத் தொடர்ந்து வரவு வவுச்சகளினைச் சேகரிப்பதற்கான கோரிக்கையானது இலத்திரனியல் சேவைகளினைப் பயன்படுத்துவதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது. வரவு வவுச்சர்களின் சேகரிப்புக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருகை தரும் போது. அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர் அவரின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கான மூலச் சான்றிதழ்கள் மற்றும் இயைபான ஆவணம் என்பவற்றுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருகை தருதல் வேண்டும். வரவு வவுச்சர்களின் புதிய தொடருக்கு கோரிக்கை விடுக்கப்படுகின்ற போது, பயன்படுத்திய வரவு வவுச்சர்களின் பிரதிகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர், அத்தகைய கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கலண்டர் மாத்தின் இறுதியிலிருந்து 20 நாட்களுக்கு குறையாமல் பதிவு செய்யப்பட்டு, இனங்காணப்பட்ட வழங்குனருக்கு இடைநிறுத்தப்பட்ட கொள்வனவு மீதான வரவு வவுச்சரை வழங்குமாறு கோரப்படுகின்றார். எவ்வாறாயினும், முறையற்ற வகையில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் அச்சந்தர்ப்பத்திலேலே வரவு வவுச்சர்கள் வழங்கப்படலாம். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் ஏதேனும் கலண்டர் மாத காலப்பகுதியில் ஒரு வழங்குனரிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட மொத்த கொள்வனவுகளினை உள்ளடக்குகின்ற ஒரு வவுச்சரினை வழங்குமாறு கேட்கப்படுகின்றார். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொளவனவாளரானவர் வழங்கப்பட்ட அனைத்து வவுச்சர்களின் பிரதிகளினையும் வைத்திருக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

(iv) வங்கி கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையில், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்ற இயைபான கலண்டர் மாத்தின் இறுதியிலிருந்து 07 நாட்களினுள் இலத்திரனியல் சேவைகளினைப் பயன்படுத்தி இ.பெ.சே.வ. படிவம் 04 இனை சமர்ப்பிக்கின்ற வங்கியுடன் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற மாதத்தின் இறுதியிலிருந்து 07 நாட்களினுள் அல்லது கொடுக்கல் வாங்கலின் போது இ.பெ.சே.வ. வரவு வவுச்சரினை சமர்ப்பிப்பதற்கு கட்டுப்படுகின்றார்.

(v) தவறு காரணமாக ஏதேனும் வரவு வவுச்சர் இரத்துச் செய்யப்படுமிடத்து, அவ்வாறு இரத்துச் செய்யப்பட்ட வரவு வவுச்சரின் மூலப் பிரதியானது வரவு வவுச்சர் ஏட்டில் இணைக்கப்படுதல் வேண்டும்.

(vi) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகமாவைர், வரவு வவுச்சர்கள் தேவையான வீதாசாரத்தில் விடுவிக்கப்படாமல் அல்லது இ.பெ.சே.வ. 04 இற்குத் தேவையான அங்கீகாரமானது உரிய நேரத்தில் வழங்கப்பட்டிருக்காமல் காணப்படுமாயின், எந்நேரத்திலும் எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வவைனவாளருக்கு வரவு வவுச்சர்களை வழங்க மறுப்புத் தெரிவிக்கலாம்.

(vii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளின் தொகுப்பினை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்- அட்டவணை இ.பெ.சே.வ 06

(viii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரானவர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து அத்தகைய இ.பெ.சே.வ. 06 இன் அட்டவணை இணைய உருக்கள் மற்றும்

வேறுபடுத்தும் கருவி என்பவற்றினை பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரானவர் அட்டவணை இ.பெ.சே.வ. 06 இன் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற பிந்திய அட்டவணை இணைய உருக்களினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ix) முறையான அடிப்படையில் இற்றைப்படுத்தப்படுகின்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் கிடைக்கக் கூடியதான இ.பெ.சே.வ. துரித வழிகாட்டி இலத்திரனியல் சேவை நடைமுறையினை அறிந்து கொள்வதற்கு பின்பற்றப்படுதல் வேண்டும்.

(x) 20 இற்கும் மேற்பட்ட பதிவுகள் பதிவு செய்யப்பட வேண்டியிருக்கும் போது அட்டவணை இ.பெ.சே.வ. 07 ஆனது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் இலத்திரனியல் சேவைகளினைப் பயன்படுத்துவதன் மூலம் பதிவேற்றப்படுதல் வேண்டும். 20 இற்கும் குறைவான பதிவுகள் பதிவு செய்யப்பட வேண்டியிருக்கும் போது, அட்டவணையானது அடுத்துவரும் மாதத்தின் இறுதியன்று அல்லது அதற்கு முன்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலரின் உதவுகையுடன் இன்ராநெற் இனைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது இலத்திரனியல் சேவைகளினைப் பயன்படுத்துவதன் மூலம் பதிவேற்றப்படலாம் அல்லது புதுப்பிக்கப்படலாம்.

(ix) இ.பெ.சே.வ. 06 அட்டவணைகள் உரிய நோத்தில் சமர்ப்பிக்கப்பட்டிராத அல்லது ஏற்கனவே பதிவேற்றப்பட்ட பதிவுக்கு மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தம் அல்லது நீக்குதலாக இருப்பின், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வாளரானவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருகை தந்து அதனை உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளாறு கேட்கப்படுகின்றனர்.

(xii) கொள்வனவுகள், அக்கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்ட ஒத்திசைவான மாத காலப்பகுதியினுள் எவரேனும் வழங்குனருக்கு வழங்கப்பட்ட/பெறப்பட்ட வரவுக் குறிப்புக்காக வேறு ஏதேனும் காரணத்திற்காக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ள அல்லது செலத்த வேண்டியுள்ள கொள்வனவுகளாயின், அத்தகைய வழங்குனரின் விபரங்கள் மற்றும் குறித்த மாதத்தில் வழங்கப்பட்ட கடன் வவுச்சர் இலக்கம் மற்றும் கொள்வனவுகளின் மூலப் பெறுமதி மற்றும் வரவுக் குறிப்புக்களின் பெறுமதி என்பன இ.பெ.சே.வ. 06 இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(xiii) முன்னதாக வெளிப்படுத்தப்பட்ட கொள்வனவு தொடர்பில், எவரேனும் வழங்குனருக்கு வழங்கப்பட்ட/அவரிடமிருந்து பெறப்பட்ட வரவுக் குறிப்பு ஏதேனும் காரணத்தினால் அல்லது திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்த கொள்வனவுகளாயின், அத்தகவலானது மூலக் கொள்வனவுப் பெறுமதியுடனான வரவு வவுச்சர் இலக்கத்துடன் இ.பெ.சே.வ. 06 இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட கொளவனவுகளின் பெறுமதியானது, அத்தகைய வழங்குனரிடமிருந்தான நடப்பு காலப்பகுதிக்கான கொள்வனவுகளினைப் பார்க்க அதிகமெனில், எதிர்மறைப் பெறுமதியொன்றினைக் கொண்ட வரவு வவுச்சரே எழுதப்பட வேண்டியிருக்கும்.

(xiv) நடைமுறை மாதத்தில் கொள்வனவுகள் எதுவும் காணப்படாது, ஆனால் முன்னதாக வெளிப்படுத்தப்பட்ட கொள்வனவுகளுடன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் வழங்கப்பட்ட /பெறப்பட்ட வரவுக் குறிப்புக்களாத இருக்கின்ற கொள்வனவுகளாயின், எதிர்மறைப் பெறுமதியில் வழங்கப்படும் நடைமுறை வரவு வவுச்சர் இலக்கத்துடன் இ.பெ.சே.வ. 06 இல் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(xv) வழங்கல்களின் தேறிய பெறுமதி மீது எழுதப்பட வேண்டியிருக்கும் வரவு வவுச்சரானது மேலே விடயம் (XII), (XIII) அல்லது (XIV) இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் சூழ்நிலை தொடர்பில், இபெசேவ 04 ஆம் இலக்க படிவத்தில் வழங்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையிலானதாக அமைதல் வேண்டும்.

(xvi) வழங்கப்பட்ட/பெறப்பட்ட வரவுக் குறிப்பின் ஏதேனும் மாதத்துடன் தொடர்புடைய ஏதேனும் காரணத்தினால் அதிகரிக்கப்பட வேண்டிய கொள்வவுகளின் பெறுமதியாயின், அத்தகவலானது குறித்த மாதத்திற்காக வழங்கப்பட்ட வரவு வவுச்சர் இலக்கம் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்வனவுப் பெறுமதியினை அதிகரிக்கின்ற கொள்வனவுகளுடன் தொடர்புடைய இயைபான வரவு வவுச்சர் என்பவற்றுடன் மேலே இ.பெ.சே.வ. அட்டவணை 06 இல் வெளிப்படுத்தப்படுகின்ற கொள்வனவுகளின் பெறுமதியினைத் தருகின்ற இ.பெ.சே.வ. அட்டவணை 06 இல் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(xvii) எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வவைாளர், இந்த அட்டவணையின் பந்தி 2 இன் குறிப்பு (ஒ) இல் வரையறுக்கப்பவாறான ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட நோக்கம் அல்லது விதித்துரைக்கப்பட்ட நோக்கமாகக் கருதப்படுபவைக்காக இறக்குமதிகள் மற்றும் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதனைச் செவ்வை பார்ப்பதற்காக திணைக்கள அதிகாரிகளுக்கு வசதிப்படுத்தும் பொருட்டு அவர்களின் கோரிக்கைக்கிணங்க, கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(xviii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர், மூன்று உப தலையங்களின் கீழ் அனைத்து வரி விபரப்பட்டியல் இலக்கங்களில் வழங்கப்படுகின்றன இடைநிறுத்தப்பட்ட நியதிகளின்கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு அட்டவணையொன்றினை, கோரிக்கையின் அடிப்படையில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றார், (அதாவது பெற்றுக்கொள்ளப்பட்ட/நுகரப்பட்ட மூலப்பொருட்கள், மூலதனப் பண்டங்கள் மற்றும் சேவைகள்)

(xix) எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவார் இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களினை மேற்கொண்டிருப்பின், அத்தகைய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் இந்த அட்டவணையின் 3 அல்லது 4 ஆம் பந்தியில் விதித்துரைக்கப்பட்டவாறான தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றார். குறித்த ஏதேனும் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வவைாளர் இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களினை மேற்கொண்டிருக்காவிடின், அவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரின் உருவகப் பெட்டியிலுள்ள செவ்வைப் பெட்டியில் இடைநிறுத்தப்பட்ட வழங்கல் எதுவும் இல்லையென குறிப்பீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

(xx) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரானவர் இடைநிறுத்தப்பட்ட நியதிகளின் கீழ் பெசேவ சட்டத்தின முதலாவது அட்டவணையின் பகுதி 11 இன் கீழ் விலக்களிக்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளினைக் கொள்வனவு செய்தலாகாது. ஏதேனும் இ.பெ.சே.வ வரவு வழங்கப்பட்டிருக்குமாயின் அது அனுமதிக்கப்படலாகாது என்பதுடன் பெ.சே.வ விபரத்திரட்டின் கூடு 8 அ இலுள்ள அத்தகைய பெறுமதியில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

5.4 **பெ.சே.வ விபரத்திரட்டு**

5.4.1 **கொள்வனவுப் பெறுமதி**

(i) கொள்வனவுப் பெறுமதியானது இடைநிறுத்தப்பட்ட வரி விபரப்பட்டியல் பொறப்படுகின்ற மாதத்திற்காக பெ.சே.வ. விபாத்திரட்டின் கூடு ''J'' இலுள்ள இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளின் கீழ் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய கொள்வனவானது குறித்த மாத காலப்பகுதியில் வெளிப்படுத்தப்படிருக்காவிடின் , 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் நேக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற கணக்குகளுக்கான அதே வரி மதிப்பீட்டாண்டினுள் உடனடுத்து வரும் மூன்று மாதகாலப்பகுதியினுள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டுப். இடைநிறுத்தப்பட்ட பெ. சே. வ. தொகையானது கூடு "K" இல் வெளிப்படுத்தப்படுதல் மீதான பெ.சே.வ. சாராத சநதர்ப்பங்களாயின், அவை வெளியிலிருந்து கழிப்பனவு செய்யக் கூடியதாக இருந்திருக்க மாட்டாது. அந்தவகையில், இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. ஆனது மீளளிக்கத்தகாததாகும். பந்தி 5.1 இன் விடயம் (ii) இல் குறிப்பிடப்பட்டவாறு பெ.சே.வ. சட்டத்தின் ஏற்பாடுகள்ன் கீழ் அனுமதிக்கத்தகாக இடைநிறுத்தப்பட்ட நியதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் மீதான ஏதேனும் உள்ளீட்டு வரியாக இருக்குமிடத்து, அது பெ.சே.வ. விபரத்திரட்டின் கூடு 8A இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ii) பெ.சே.வ. விபரித்தரட்டிலுள்ள இடைநிறுத்தப்பட்ட வழங்கல் பெறுமதியானது, வரவுத் தாள்கள் மற்றும் இ.பெ.சே.வ. படிவம் 06 இலுள்ள வெளிப்படுத்தப்பட்ட செலவுத்தாள்களஜன் பெறுமதிக்கு தெிரான கொள்வனவுப் பொறுமதியின் மிகையாக இருத்தல் வேண்டும்.

5.5 ***மீளளிப்புகள்***

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரானவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரிடமிருந்து கொள்வனவுகளை மேற்கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். கங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏதேறும் முற்பணக் கொடுப்பனவு மற்றும் கீழே விடயம் (iii) குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் சூழ்நிலைகளின் கீழ் செலுத்தப்பட்ட பெ.சே.வ. தவிர்ந்த வேறு ஏதேனும் சந்தர்ப்பங்களில் மீளளிப்புக்கள் வழங்கப்படுவதில்லை.

(ii) கீழே விடயம் (iii) இல் குறித்துரைக்கப்பட்டவாறு கோரத்தக்கதான பெ.சே.வ. நோக்கங்கள் அல்லது பெ.சே.வ. கூறுகளுக்கு அனுமதிக்கத்தகாததான அத்தகைய கொள்வனவுகளுடன் தொடர்புடைய உள்ளீடுகள் தொடர்பான கொள்வனவாக இனங்காணத்தக்கதான அத்தகைய கொள்வனவுகளாக இல்லாதிருப்பின், கொள்வனவாக மீதான சாதாரண வரி விபரப் பட்டியலொன்றினை ஏற்றுக் கொள்வதற்கு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருக்கு அதிகாரமளிக்கப்படவில்லை. உள்ளீட்டு வாக் கோரிக்கைக்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய சாதாரண வரி விபரப்பட்டியலுக்குப் பதிலாக, பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் கீழே விடயம் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளினைப் பொறுத்தவரையில் சாத்தியமான வகையில், பதிவு செய்யப்பட்டு

இனங்காணப்பட்ட வழங்குனராக இ.பெ.சே.வ. திட்டத்தின் கீழ் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரிக்கை விடுப்பதன் மூலம் இடைநிறுத்தப்பட்ட வரி விபரப் பட்டியலென்றினை வழங்குமாறு வழங்குனருக்கு கோரிக்கை விடுத்தல் வேண்டும்.

(iii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரானவர், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர் ஒருவரல்லாத வேறு எவரேனும் பெ.சே.வ. பதிவு செய்யப்பட்ட ஆளொருவரிடமிருந்து ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளினைப் பெற்றிருப்பின், மிகை உள்ளீட்டினைப் பொறுவதற்கு அல்லது உள்ளீட்டு வரி வரவினைக் கோருவதற்கு உரித்துடையவர்களாவர்.

(iv) கொள்வனவானது எவரேனும் தடை செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனளர் அல்லது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரிடமிருந்து மேற்கொள்ளப்பட்டிருப்பது தெரியவருமயின், அத்தகைய ஆட்களிடமிருந்து பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாரினால் பெறப்பட்ட வரி விபரப்பட்டியல்கள் மீது மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது.

6. **பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்னளுக்கான விசேட ஒழுங்குவிதிகள் - அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளர்கள் (ஒப்படை கொள்வேர்கள்)**

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் ஏற்றுமதி செய்யப்படும் இறுதிப் பொருளுக்குரிய வெளிநாட்டு கொள்வனவாளரின் சார்பில் உள்நாட்டு வழங்குனரிடமிருந்து (ப.இ.வ.) அந்நியச் செலாவணியல்லா அல்லது காகல்லா அடிப்படையில் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெறுகின்ற நோடி ஏற்றுமதியாளரொருவராயின், அத்தகைய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளராக (ஒப்படை கொள்வோர்) பெயரிடப்படுவதுடன், காசல்லா அடிப்படையிலான வழங்கல் மீது பதிவு செய்யப்பட்ட வரி விலை விபரப்படடியல் “அந்நியச் செலாவணியல்லா இடைநிறுத்தப்பட்ட வரி விலை விபரப்பட்டியல்” ஒன்று வழங்கப்படுகின்றது. அதன் பின்னர் அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளர், வெளிநாட்டு கொள்வனவாளருக்கான பொருட்களின் ஏற்றுமதிக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் அத்தகைய வழங்கல்கள் அளிக்கப்பட்ட அத்தகைய வழங்குனர்களுக்கு (ப.இ.வ.) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்ட “அந்தியச் செலவணியல்லா வரவு வவுச்சர்” ஒன்றினை வழங்குதல் வேண்டும். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவளர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்கள அலுவலரின் சரிபர்த்தலுக்காக ஆதரவு ஆவணங்களை வைத்திருத்தல் வேண்டும்.

(ii) அந்நியச் செலாவணியல்லா கொள்வனவுகளின் பெறுமதியானது பெ.சே.வ. பொருள் விபரத்திரட்டின் கூடு “J1” இல் அந்நியச் செலாவணியல்லா கொள்வனவுகளின் கீழ் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. தொகையானது “K1” இல் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(iii) ஏனைய அனைத்து ஒழுங்குவிதிகளும் நடைமுறைகளும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குளர்களுக்கேற்றவாறு சாதாரண இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. வரி திபரப்பட்டியல், இடைநிறுத்தப்பட்ட கொள்வனவு மற்றும் வரவு வவுச்சர் என்பனவற்றிற்கு ஏற்புடைய வகையில் சாதாரண முறையில் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

7. **ஆவணங்கள்**

வழங்குனர்களினால் வழங்கப்பட்ட பொருட்கள்/சேவைகள் வெளிப்படுத்துகைப் படிவம் இ.பெ.சே.வ 04 மற்றும் குறைநிரப்பு அட்டவணை இபெசேவ 05, 05அ மற்றும் 05ஆ என்பன அத்தகைய வழங்குளர் இ - சேவையினைக் கொண்டிருக்காவிடின், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருடன் பரஸ்பரம் உடன்பட்டுக் கொள்ளுதல் வேண்டும். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் முறையாக கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் இணையத்தளம் மூலமாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து முதன்மைத் தகவலினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக அவரிற்குரிய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

8. **பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவளர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்களுக்கான பொதுவான அறிவுறுத்தல்கள்**

(i) அனைத்து பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவார்களும் பெ.சே.வ. விபரத்திரட்டுக்களை மாதாந்தம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) அனைத்தி பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்களும் தமது பெ.சே.வ. விபரத்திரட்டுக்களை காலாண்டு அடிப்படையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளார்கள் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனார்களுக்குப் பொருந்தக் கூடிய அனைத்து அறிவுறுத்தல்களையும் பின்பற்றுதல் வேண்டும்.

(iv) பெறுமதியானது கிட்டிய ரூபாவில் இருத்தல் வேண்டும். (சதங்களில் பதிவு செய்ய வேண்டாம்)

(v) அத்தகைய படிவங்கள் ஒரு கலண்டர் மாதத்திற்கு மேற்பட்ட தகவல்களினைக் கொண்டிருத்தலாகாது. இ.பெ.சே.வ. திட்டத்திற்காக பதிவு செய்யப்பட்ட ஆளொருவரின் முகவரி மாற்றத்திற்கான கோரிக்கையானது வரி செலுத்துனர் சேவைப் பிரிவுக்கு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(vi) தொலைந்து போன வரவு வவுச்சர் ஏடுகள் அல்லது வரவு வவுச்சர்கள் தொடர்பில் அத்தகைய வரவு வவுச்சர் ஏடுகள் அல்லது வவுச்சர்களை இரத்துச் செய்யக் கூடிய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சத்தியக் கடதாசி மற்றும் பொலிஸ் அறிக்கைகளுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(vii) இ.பெ.சே.வ. பதிவு செய்தலினை இரத்துச் செய்தலானது மூலச் சான்றிதழுடன் அது தொடர்பில் விடுக்கப்படும் வேண்டுகோளானது கிடைக்கப் பொற்றதன் பின்னர் பெ.சே.வ. பதிவு செய்தலினை இரத்துச் செய்ததன் பின்னர் மேற்கொள்ளப்படும். இரத்துச் செய்தல் நடைமுறையானது இ.பெ.சே.வ. 04 படிவம் மற்றும் உரிய இ.பெ.சே.வ. திட்டத்தின் கீழான அட்டவணைகள் என்பவற்றின் அனைத்து வருமதிகளும் பெறப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படும். மேலும், இரத்துச் செய்யப்பட்டவுடன் அத்தகைய ஆளின் பெயரானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். மேலும், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால், அவரினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காத பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் தொடர்பாக கிடைக்கப் பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில் அவரின் தற்துணிவினால் இரத்துச் செய்தல் மேற்கொள்ளப்பட முடியும்.

(viii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர் முறைமையானது இந்த ஒழுங்குவிதியின் 2 ஆம் பந்தியின் உபபந்தி (ஈ) அல்லது (உ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தியதன் பின்னர் மூலச்சான்றிதழுடன் விடுக்கப்படும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகுதிநிலைக்கு மாற்றப்பட முடியும்.

(ix) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகுதிநிலையானது பெறப்பட்ட மூலச்சான்றிதழ் மற்றும் வரவு வவுச்சர்களின் மூலச்சான்றிதழுடன் (ஏதேனும் இருப்பின்) விடுக்கப்படும் கோரிக்கையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனருக்கு மாற்றிக் கொள்ளப்பட முடியும்.

(x) தேவையான வீதாசாரமனது, மூன்று தொடர்ச்சியான வரி விதிக்கத்தக்க காலப்பகுதிக்குள் அடையப் பெற்றிருக்காதவிடத்து, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடிய தகவல்களின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகுதிநிலையானது பதிவு செய்யப்பட்டு இளங்காணப்பட்ட வழங்குனராக மாற்றிக் கொள்ளப்பட முடியும்.

(xi) இரண்டு நபர்களும் தரப்பட்ட அட்டவணை உருமாதிரிகளில் கிடைக்கக் கூடியதாகவுள்ள அட்டவணைகளில் பதிவேற்றம், இற்றைப்படுத்தல் அல்லது சமர்ப்பித்தலினை மிகச் சரியாக மேற்கொண்டிருப்பின், இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள் மற்றும் வழங்கல்களின் உறுதிப்படுத்துகையானது மேற்கொள்ளப்படும்.

*9.* **தண்டனைக் கோவை ஏற்பாடுகள்**

அ. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள்

இ.பெ.சே.வ. திட்டத்தின் இறுதிப் பயன்பாட்டாளர்கள் என்ற வகையில், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள், நியதிச்சட்ட கடப்பாடுகளுடன் கூடிய முறைப்பாடுகளுக்கு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்களுக்கு ஆதரவளிக்கும் அதேவேளையில், இ.பெ.சே.வ. இணக்கப்பாடுகள், கடப்பாடுகள் என்பவற்றினையும் கடுமையாகப் பின்பற்றுதல் வேண்டும்.

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களினால் செலுத்த வேண்டிய வரவு வவுச்சர்கள் விநியோகிக்கப்படாமை அல்லது எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களினால் தேவையான படிவங்களினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு உரிய நோத்தில் சமர்ப்பிக்காமை, வேறு ஏதேனும் வழிகளில் செயல்முறையில் தாக்கத்தினை உண்டுபண்ணக் கூடிய ஏதேனும் விடயம் போன்றவை பெ.சே.வ. சட்டத்தின் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் கடுமையான முறையில் கையாளப்படுதல் வேண்டும்.

(ii) உரிய காலப்பகுதியில் வரவு வவுச்சர்களினைச் சமர்ப்பிக்காமை தொடர்பில் வழங்குனர்களிடமிருந்தான முறைப்பாடுகளினைக் கேட்டறிந்த பின்னர், அத்தகைய கவனயீனம் காரணமாக வழங்குனர் பாதிப்புக்குள்ளாகியுள்ளார் என்பது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் திருப்திப்படும் வகையில் நிரூபிக்கப்படுமாயின், குறித்த பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் மீது வரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட முடியும் அல்லது அத்தகைய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்.

(iii) செயல்முறையில் மற்றைய தரப்பிற்கு ஏதேனும் வகையில் பாதிப்பினை உண்டுபண்ணக் கூடிய, உரிய இ.பெ.சே.வ. 04 முறையாக அங்கீகரிக்கப்படாமை மற்றும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் உரிய நேரத்தில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு இ.பெ.சே.வ. 06 இனைச் சமர்ப்பிக்காமை என்பவை விபரத்திரட்டுக்களினைச் சமர்ப்பிக்காமையுடன் தொடர்புடைய பெ.சே.வ. சட்டத்தின் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் இறுக்கமான முறையில் கையாளப்படும்.

(iv) இடைநிறுத்தப்பட்ட நியதிகளின்ன் கீழ் எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் பொசேவ சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி 11 இன் கீழ் ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகள் விலக்களிக்கப்பட்டிருப்பின், பெ.சே.வ சட்டத்தின் நியதிச் சட்ட ஏற்பாடுகள் கடுமையாகப் பிரயோகிக்கப்படும்.

ஆ. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்கள்

(i) பெ.சே.வ சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி 11 இன் கீழ் விலக்களிக்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள இடைநிறுத்தப்பட்டுள்ள வரி விபரப்பட்டியல்களாயின், பெசேவ சட்டத்தின் நியதிச்சட்ட ஏற்பாடுகள் கடுமையாகப் பிரயோகிக்கப்படும்.

(ii) செயல்முறையில் மற்றைய தரப்பிற்கு ஏதேனும் வகையில் பாதிப்பினை உண்டுபண்ணக் கூடிய, இடைநிறுத்தப்பட்ட வரி விபரப்பட்டியல்களினை வழங்குவதில் வழங்குனர்களின் கவனயீனம், இபசேவ படிவம் 04 இனை இற்றைப்படுத்தல் மற்றும் அட்டவணைகள் இபெசேவ 05, இ.பெ.சே.வ 05அ, இ.பெ.சே.வ 05ஆ மற்றும் இபசேவ 07 ஆகியவற்றினை உரிய நோத்தில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்காமை என்பவை விபரத்திரட்டுக்களினைச் சமர்ப்பிக்காமையுடன் தொடர்புடைய பெ.சே.வ. சட்டத்தின் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் இறுக்கமான முறையில் கையாளப்படும்.

10. **இத்திட்டத்தின் நோக்கங்ளுக்காக குறித்துரைக்கப்பட்ட படிவங்கள் மற்றும் அட்டவணைகள் பின்வருமாறு**

(அ) பதிவு செய்தல் படிவம்

(ஆ) பெ.சே.வ. அறவிடப்படாமல் வழங்கல்களுக்கு பயன்படுத்தப்படும் இடைநிறுத்தப்பட்ட பெ.சே.வ. விலை விபரப்பட்டியல் - (இ.பெ.சே.வ 02)

(இ) அந்நியச் செலாவணியல்லா இடைநிறுத்தப்பட்ட விலை விபரப்பட்டியல் - (இ.பெ.சே.வ 02 (அ)

(ஈ) பதிவு செய்யப்பட்டு இனங் காணப்பட்ட வழங்குனர்களினால் புதுப்பிக்கப்பட வேண்டிய இ.பெ.சே.வ. 04 படிவம்.

(உ) திணைக்களத்திலிருந்து பெறப்பட வேண்டிய மற்றும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரிடமிருந்தான கொள்வனவுகள் மீதான பெ.சே.வ. கொடுப்பனவு பொறுப்பினை கொடுத்துத் தீர்ப்பதற்காக கொள்வனவாளரினால் பயன்படுத்தப்படும் இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வ. கடன் வவுச்சர் - (SVCV)

(ஊ) மாதாந்த குறைநிரப்பு வெளிப்படுத்துகை படிவம் - அட்டவணை இபெசேவ 05

(எ) இடைநிறுத்தப்பட்ட வரவுத்தாள்கள் வெளிப்படுத்துகை படிவம் - அட்டவணை இ.பெ.சே.வ 05அ

(ஏ) இடைநிறுத்தப்பட்ட செலவுத்தாள்கள் வெளிப்படுத்துகை படிவம் - அட்டவணை இ.பெ.சே.வ 05ஆ

(ஐ) இடைநிறுத்தப்பட்ட வழங்கப்பட்ட/பெறப்பட்ட வரவுத்தாள்கள் மற்றும் வழங்கப்பட்ட /பெறப்பட்ட செலவுத்தாள்கள் உள்ளடங்கலான இடைநிறுத்தப்பட்ட சாதாரண மற்றும் அந்நியச் செலாவணியல்லா அடிப்படையிலான வழங்கல் பொழிப்பு - அட்டவணை இபெசேவ 07

(ஒ) இடைநிறுத்தப்பட்ட வழங்கப்பட்ட/பெறப்பட்ட வரவுத்தாள்கள் மற்றும் வழங்கப்பட்ட /பெறப்பட்ட செலவுத்தாள்கள் உள்ளடங்கலான இடைநிறுத்தப்பட்ட சாதாரண மற்றும் அந்நியச் செலாவணியல்லா அடிப்படையிலான வழங்கல் பொழிப்பு - அட்டவணை இபெசேவ 06

*11.* **இந்த ஒழுங்குவிதித் தொகுப்பானது காலத்திற்கு காலம் திருத்தத்திற்குட்படும்.**

*2012.07.30 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் SEC 2012/03 மற்றும் 2015 ஏப்ரல் 16 ஆம் திகதிய 1910/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றின் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு முந்திய காலப்பகுதிக்கு மேலோங்கி நிற்கும்.*

*10-225*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.